செய்தி வெளியீடு எண்.59/2016 நாள் 28.11.2016

# குடிநீர் இணைப்பிற்கு இடைத்தரகர்களை அணுகவேண்டாம் - குடிநீர் வாரியம் அறிவிப்பு

உள்ளகரம்–புழுதிவாக்கம் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் நிறைவடைந்து புழுதிவாக்கம் பேருந்து நிலையம், எம்.ஜி. நகர் மற்றும் அருள்ஜோதி சாலை ஆகிய பகுதிகளில் 30.07.2016 அன்று முதல் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு, உரிய கட்டணங்கள் செலுத்தி பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மேற்கூறிய பகுதிகளில் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுவருகிறது. இவ்வாறு குடிநீர் இணைப்பு வழங்குவதில் வெளியாட்கள் மற்றும் இடைத்தரகர்களின் தலையீடு இருப்பதாக பொதுமக்களிடமிருந்து புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாரியத்தின் அலுவலகத்தில் விநியோகிக்கப்படும் குடிநீர் இணைப்புக்கான விண்ணப்பப்படிவங்களில், விண்ணப்பிக்கும் முறைகள் குறித்த விளக்கம் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் விவரம் அறிய, பொதுமக்கள் சென்னைக் குடிநீர் வாரிய அதிகாரிகளை தொடர்பு கொள்ளவேண்டுமெனவும், வாரியத்திற்கு தொடர்பற்ற வெளியாட்கள் அல்லது இடைத்தரகர்களை அணுக வேண்டாம் என்றும் இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள கைபேசி எண்கள் :

1. உதவி பொறியாளர் பணிமனை 168 81449 30168
2. உதவி பொறியாளர் பணிமனை 169 81449 30169
3. துணை பகுதி பொறியாளர் 81449 301267

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்